[திரு துரை முருகன்] [1978 மார்ச் 15

காலைப் பத்திரிகையிலே மிகப் பரபரப்பூட்டக்கூடிய அளவில் இன்றைக்குச் செய்தி வந்திருக்கிறது. எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குரிய கேள்வித்தாளை அதாவது பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கு கொடுக்க வேண்டியதை ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்கும் ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்குக் கொடுக்க வேண்டியதை பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கும் மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். எம். சி. டி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இந்து உயர்நிலைப் பள்ளி, வேப்பேரியில் உள்ள புனித பால் உயர்நிலைப்பள்ளி மற்றும் கள்ளக்குறிச்சியில் ஒரு நகராட்சிப்பள்ளி ஆகிய இடங்களில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. இது மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதுபற்றி அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர். இவ்வாறு பிரச்சனையைக் கிளப்புவது சரியல்ல. அவர் முன்பே என்னிடம் இதுகுறித்து எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். இது எழுத்து மூலமாகத் தர வேண்டிய விஷயம். திடீரென பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆரம்பிப்பது சரியல்ல. இது சபையின் நேரத்தை வீணுக்குவது போல் இருக்கிறது. ஆகையால் இதனை முன்பே எழுத்து மூலமாகத் தந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்கு ஏற்பட்ட பீதியும் பரபரப்பும் நாட்டிலே யாருக்கும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் இவ்வாறு கேள்வித்தாள் மாறுவதற்கு காரணமாய் இருந்த தலைமையாசிரியர்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் மாணவர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்புத் தருவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தகவல் கோரல்.

அ) கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் விளுத்தாள்கள் மாற்றப்பட்டது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். எங்கள் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் இதேவிதமாக பேப்பர் மாற்றப்பட்டு அவர்கள் தேர்வு எழுதாமல் புறக்கணித்து விட்டார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன் கேட்பதற்கு இது நேரம் அல்ல.

திரு. துரை முத்துசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. அவருக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லை என்றால் உட்கார வேண்டியதுதான். அவர்களது பதில் உங்களுக்கும் சேர்த்துத்தான்.

திரு. துரை முத்துசாமி : நான் கேட்க விரும்புவது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற விதிகளைப் படித்துவிட்டுப் பேசுங்கள். தயவு செய்து உட்காருங்கள். எது வேண்டுமானாலும் பேசக்கூடாது. இது மன்றம். அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் சேர்த்து பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எழுந்திருந்து வலியுறுத்துவது என்பது நம் மரபுகளுக்கு அழகல்ல. ஆகவே, விதிகளுக்கு உட்பட்டுப் பேசுங்கள்.

(2) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஒரு கொலை வழக்கைப்பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் ஆதாரங்களை அளித்தல் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று பேரவை உறுப்பினர் நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கொலை வழக்கைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அவர், அதைப் பேசும்போது நான் ஆதாரங்கள் வைத்திருக்கிறேன், நான் காட்டுகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்ன பிறகு அவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்காமல் இருக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்குக் காரணம் இந்த மன்றத்தில் அவர்கள் பேசியதற்குப் பின்னால், பத்து நாட்களுக்கு முன்னால் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன், இப்பிரச்சனை பற்றி. நிரூபிப்பது பற்றி, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்று கேட்டேன். நீங்கள் பதில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள், பத்து நாட்களாகிவிட்டன. (குறுக்கீடுகள்.)